ISSN 2454-3993

▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 2 ▪ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

3.085 IMPACT FACTOR
JOURNAL WITH ★★★ SIJ TAMIL STUDIES

**மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
விரகனூர், மதுரை

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
மதுரை

இணைந்து நடத்தும்

தொகுதி – 2

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**




08.02.2019

**பதிப்பாசிரியர்கள்**

திருமதி. சே.சலோமி இராஜரிகம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019
Shanlax International Journal of Tamil Studies
A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி.சே.சலோமி இராஜரீகம்<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்<br>முனைவர் இரா.ஏஞ்சல்<br>முனைவர் கோ.கருணாகரன்<br>முனைவர் செ.அன்புராணி<br>திருமதி ஜோ.சகாய பவுலின் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி, 2019 |
| வெளியீடு | : | மெடோனா பெண்கள் கலை மற்றும்<br>அறிவியல் கல்லூரி<br>விரகனூர், மதுரை - 625 009. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 179 |

**ISSN : 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்**

# பெண் ஆளுமைத் திறன்

முனைவர் ஆ.ஜோஸ்பின் செலின் மேரி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், புனித அந்தோணியார்
பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

மலர்: 3
சிறப்பிதழ்: 2
மாதம்: பிப்ரவரி
வருடம்: 2019
ISSN: 2454-3993

பெண் சக்தியின் வடிவம். சக்தி இருக்கும் இடத்தில்தான் முழுமை இருக்கும். பெண் ஆளுமையோடு பூரண நிலையில் இருந்ததால்தான் கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றிற்கு பெண்ணின் பெயரையே சூட்டி தெய்வமாகப் போற்றி வந்தனர். தாய்வழிச் சமூகத்தில் ஆளுமையோடு இருந்த பெண், தந்தைவழிச் சமூகத்தில் பாலினப்பாகுபாட்டோடு பார்க்கப்பட்டாள். இப்பாகுபாட்டால் சமூக, பொருளாதார சூழலில் ஆணோடு பெண் சரிநிகராக செயல்பட்டாலும், அவளின் ஆற்றலும் ஆளுமையும் சமூகப் பங்களிப்பும் பெரிதாக கருதப்படுவதில்லை. பெண்மீது சமூகம் கொண்டுள்ள இவ்வலட்சியப் போக்கை மாற்றும் விதத்தில், பாலினச் சமத்துவத்தை முன்னிறுத்தி, ஆளுமைமிக்கவள் பெண் என்பதை வெளிப்படுத்தும் சிந்தனையின் எழுச்சியாக எழுந்தது பெண்ணியம். இப்பெண்ணியம் வலியுறுத்தியப் பாலினச் சமத்துவத்தால், பெண் புத்துயிர் பெற்று, தன்னிலை உணர்ந்து, சீரிய சிந்தனைத் திறன், தெளிந்த நோக்கு, தேர்ந்த செயல்திறன் கொண்டு, ஆற்றலையும் ஆளுமையையும் நிருபிப்பதோடு பெண் இல்லாத துறை இல்லை என்பதும் நடைமுறையாகி வருகிறது. விவேகமும் படிப்பும் துடிப்பும் இலக்கணமாகக் கொண்ட பெண், குடும்ப, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளில் ஆளுமையோடு திறன்கொண்ட பெண்ணாக செயல்பட்டு வரும் சிறப்புகளை வெளிக்கொணர முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பெண் - பெண்மை

பெண் என்ற உயிரியையும் அவ்வுயிருக்கான இயல்பையும் முழுமையாக உணரும் போதுதான் பெண் பிறப்பின் மேன்மை வெளிப்படுகின்றது. இம்மேன்மையை உணர்ந்த வள்ளுவர், 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' (குறள்:54) என்று உலகிற்கு அறிவுறுத்தினார். மேலும், பெண் என்ற விளக்கத்திற்கு அகராதியும் இலக்கியங்களும் காப்பியங்களும் பல சான்றுகளைத் தருகின்றன. பெண்ணை, நங்கை, கோதை, தையல், நாரி, அணங்கு, நல்லாள், மெல்லியள், காரிகை, மாது, மகடூஉ, மானார், மாதராள், இளம்படியாார், பாவை, கொடி, பூவை என்று இலக்கியத்தில் பெண்ணின் பெயர்கள் சான்றுகளாக்கப்பட்டுள்ளன.

பாரதியார்,

**"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!**
**பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா!"**

என்று பெண்மை வாழ்க, வெல்க என்று போற்றுவதில் மகிழ்ச்சி கொண்டார்.

காந்தியடிகள்,

**"இன்னொரு பிறவி எனக்கிருந்தால் நான் பெண்ணாகவே பிறக்க விரும்புகிறேன்"**

என்று பெண் பிறப்பை விரும்பி வரவேற்றார். தாகூர்.

**"பெண்களிடம் ஓர் அபூர்வ சக்தி இருக்கிறது. இந்த சக்தியை மதித்து உபயோகிப்பதில்தான் பெருமை இருக்கிறது"**

என்று பெண் சக்தியின் பெருமையை குறிப்பிட்டுள்ளார்.

**"கல்வி, சங்கீதம், புகழ், செல்வம், வெற்றி, பூமி, தண்ணீர், தானியம் முதலிய எல்லா அம்சங்களுக்கும் தலைமை தாங்குவது பெண் சக்திகளே"**

என்கிறது மகாபாரதம்.

மேற்கூறப்பட்டக் கருத்துகளிலிருந்து பெண் சக்தி நிறைந்தவள், சகலத்திற்கும் தலைமைத்துவம் கொண்டவள் என்பது சிந்தனையில் தெளிவை ஏற்படுத்துவதோடு, பெண் வெறும் உடற்கூறினால் மட்டுமே பார்க்கப்படக் கூடியவள் அல்ல, பெண்ணுக்கான இயல்புகளுடன் பொருத்திப் பார்க்கின்றபொழுதுதான் பெண்ணின் பெருமையை முழுமையாக உணர முடியும் என்பதும் அறிவுறுத்தப்படுகிறது.

**தாய் - தாய்மை**

பெண்மைக்கான பெருமையெல்லாம் அவளது தாய்மையில் தான் முழுமையடைகிறது. இத்தாய்மையை உணர்ந்து போற்றியோர் பலர். அவர்களுள் பெண்ணின் தாய்மை நிலையைத் தாய்மைத் தொண்டு என்று குறிப்பிடுகிறார் திரு.வி.க.

**"தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணி. பயன் கருதாதத் தொண்டு தெய்வீகம் நிரம்பியது"**

**(திரு.வி.க., பெண்ணின் பெருமை, ப.22.)**

என்று தாய்மையை உயர்வாகப் போற்றியுள்ளார். பெண் மூலம் உருவாகும் மனிதகுலத்தை தனக்குரிய பேறாகவும் அதை தொண்டாகவும் மட்டுமே கருதி வருகிறாள்.

**பாலினச் சமத்துவம் (Gender Equality)**

ஆண், பெண் இருவருக்கும் எல்லா நிலைகளிலும் சமமான நெறிகளை வகுத்து, அதனை இருவருக்கும் பொதுவாக்குவது பாலினச் சமத்துவம் ஆகும்.

**"மனித இனச் சமன்பாட்டை நாடுவதே பெண்ணியத்தின் தலையாய குறிக்கோள்"**

**(எம்.ஏ.சுசீலா, பெண் இலக்கியம் வாசிப்பு, ப.19)**

இச்சமத்துவத்தை நடைமுறைப்படுத்தப் போராடிய பெண்ணிய அமைப்புகள், பெண் முன்னேற்றத்தையே முன்னிறுத்தியது. 'பெண் முன்னேற்றம் இல்லாத நாடு, சமூக முன்னேற்றமாக இருக்கமுடியாது' என்ற லெனினின் கூற்றுப்படி, குடும்ப அமைப்பில் பெண் சுமையாக இல்லாமல், தன்னிலையில் அதிகாரம் பெற்று சுயசார்புத்தன்மை அடைய ஊக்குவிக்கப்படுகிறாள். இத்தகைய பெருமைகள் அனைத்தும் பெண்ணியச் சீர்திருத்தவாதிகளையே சாரும். இவ்வரிசையில்

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"**

எனப் பாடிய பாரதி இன்று பெண்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நடத்துவதை அன்றே தீர்க்கதரிசனமாய் கூறியுள்ளார். பெண்ணின் சிறு உழைப்பு கூட ஒவ்வொருவரின் மனதில் உயர்வாக மதிக்கப்பட வேண்டும். பெண் முழுமையான ஆளுமை அடைய வேண்டுமானால் பெண் தன்னிலை உணர்வதும் உரிமையைப் பெறுவதில் விழிப்புணர்வும் அவசியமாகின்றது.

ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் தூண்டப்படும் தன்னம்பிக்கை மற்றும் தற்சார்புத் தன்மையை முழுமையாக வளர்த்தெடுத்தலே ஆளுமையின் பங்காகின்றது. வீட்டைப் பராமரிப்பது முதல் விண்வெளிக்குச் செல்வது வரை அவர்கள் செய்து வரும் பணிகளும் சாதனைகளும் அவர்களின் மேம்பட்ட வாழ்வை காட்டுவதாக அமைந்துள்ளது. இத்தகைய நிலைப்பாடே பெண்ணுக்கான ஆளுமையாகக் கருதப்படுகிறது.

### பெண் ஆற்றல்பேறு (Woman Empowerment)

'Empowerment' என்ற ஆங்கிலச் சொல் தமிழில் ஆற்றல்பேறு, மேம்பாடு, அதிகாரப்படுத்தல், ஆற்றல்படுத்தல் எனப் பொருள் தருகிறது. மேலும், ஆற்றலாதல் என்பது

**"ஒரு தனிமனிதனை உடல் ரீதியாக, மனரீதியாக, சமுதாய மற்றும் புனிதமான உணர்வின் அடிப்படையில் அவனிடம் மறைந்துள்ள முழுத்திறனையும் அவளை/அவனை அறிய வைக்கும் வழி"**

**(மு.கல்யாண சுந்தரி, பதிப்பாசிரியர், மகளிர் மேம்பாடு, ப.11)**

என்று ஆற்றல்பேறு குறித்து விளக்கம் தருகிறது. இவ்வாற்றல்பேறானது பொருளாதார அறிவு வளங்களை அதிகாரத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும் தற்சார்புடன் மேம்பட்ட வாழ்க்கை வாழவும் செய்கிறது.

**"ஆற்றலாதல் என்றால் பெண்கள் தங்களை முழுவதுமாகப் புரிந்து கொள்ளுதலும் வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அதிகாரம் உள்ளவர்களாகவும் தங்களைத் தயார் செய்து கொள்வது. இங்கு அதிகாரம் என்பது ஒருவர் மற்றவருக்குக் கொடுப்பதல்ல. அதிகாரமுடையவராக ஒரு பெண் தன்னை உருவாக்கிக்கொண்டு, அதைச் செயல்படுத்தி நிலையாக வாழக் கற்றுக்கொள்ளுதல் ஆகும்"**

**(கா.மணிமேகலை, பெண்ணாற்றல் விண்ணாற்றல், ப.10)**

என்று ஆற்றல்பேறுக்கான விளக்கம் அளிக்கிறார் கா.மணிமேகலை.

ஆற்றல்பேறுக்கான அவசியம்

பெண் என்றால் சுமை, செலவு முதலான காரணங்களால் ஆண் பெண்ணுக்குமிடையே ஏற்றத்தாழ்வு மிகுந்துள்ளது. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படும் கருத்தாக்கங்களைப் போக்குதல் அவசியமாகின்றது.

**"கருவிலேயே, பிறந்தவுடனேயே பெண் குழந்தைகள் அழிக்கப்படுகின்றன. எழுத்தறிவு இல்லாத பெண்கள் ஆண்களை விட அதிகம். வருவாய் குறைவான, நெறிப்படுத்தப்படாத கூலிவேலை, கட்டிடத் தொழில், வீட்டு வேலை போன்றவைகளில் பெண்களே அதிகமாயிருக்கின்றனர். ஆண் பெண் விகிதத்தில், பெண்கள் எண்ணிக்கை குறைவு 1000 ஆண்களுக்கு 933 பெண்களே உள்ளனர் நம் தேசத்தில்"**

**(இரா.காஞ்சனா, பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் மொழியும், ப.60).**

இத்தகையப் பாகுபாட்டுக் கருத்தியல்கள் மாற்றம் அடைவதற்கு பெண் ஆற்றல்பேறு அடைதல் அவசியமாகின்றது.

### பெண் ஆளமைத் திறன்கள்

பெண் ஆளுமையை வளர்த்துக்கொள்வதில் வாழ்வில் முன்னேற்றமும் சதாயத்தில் உயர்ந்த நிலையையும் அடைகிறாள். இதனால் பெண்ணின் சுயமதிப்பும் மரியாதையும் மேம்பட்ட நிலையை எட்டுகின்றது. பெண்ணின் ஆளுமையை மேலும் வளர்க்கும் தன்மைகளாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. சங்கம் அமைத்து செயல்படும் திறன் (Team Builder Sprit), உடல்நலம் பேணும் திறன் (Health Status of Women), பொருளாதாரத் தற்சார்புத் திறன் (Economic Wealth), தலைமைப் பண்பு (Leadership Quality), மேலாண்மைத் திறன் (Managerial Capacity), பேச்சாற்றல் திறன் (Communication Skill), அணுகுமுறைத் திறன் (Ability to tackle issues correctly), முடிவெடுக்கும் திறன் (Decision Making Ability), தொழில் முனைவுத்திறன் (Entrepreneurship Skill), நிர்வாக நுண்ணறிவு (Administrative acumen), தன்னம்பிக்கை (Confidence), துணிச்சல் பண்பு (Courages), காலம் தவறாமை (Punctuality), நேரத்தைத் திட்டமிடல் (Time Management) முதலான ஆளுமைகளால் பெண் ஆற்றல்பேறு அடைந்து மேம்பட்டு வாழ்வதற்கான வழிகளாகும்.

### பெண் ஆளுமையுடையவளாக்கும் வழிமுறைகளும் வாய்ப்புகளும்

பெண்கள் ஆற்றலுடையவர்களாக மாற, தெளிந்த அறிவும் மனோதிடமும் அதற்கான பொருளாதார சூழலுமே காரணிகளாக உள்ளன. அதனடிப்படையில் பெண்ணுக்கு ஆற்றல் அறிவை தெளிவுபடுத்தும் கல்வி வளம், நல்ல உடல்நலம், பிறரைச் சார்ந்திருக்காத பொருளாதர வளம் ஆகியவை மிகவும்

முக்கியமானவைகளாகும். ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் இவையனைத்தும் முழுமையாக்கப்படும்பொழுது வெற்றி பெற்றவளாகிறாள். இவற்றில் முதன்மை வளமான கல்வியே பெண் ஆற்றல் அடைவதற்கான அஸ்திவாரமாக உள்ளது.

**கல்வியும் மேம்பாடும்**

ஒரு பெண் பெறும் கல்வியானது அவளோடு முடிவுறாமல் அவளது தலைமுறைக்கும் உறுதுணையாக அமைகிறது சங்க காலத்தில் பொன்முடியார், ஔவையார், காக்கைப் பாடினியார் முதலான 33 சங்ககாலப் பெண் புலவர்கள் இருந்தமைக்கானச் சான்றுகள் கிடைத்துள்ளன. கல்வியிலில் மட்டுமல்ல அறிவியலிலும் பெண்கள் இன்று சாதனைப் படைத்து வருகின்றனர். ஏழு பெண் விஞ்ஞானிகளான, மேரி கியூரி, நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அறிவியல் மங்கை, சர்வதேச விண்வெளி நிலையத்தின் முதல் அதிகாரி பெக்கி விட்சன், கடல் தளத்திற்கு வரைபடம் உருவாக்கியவர் மேரி தர்ப், மெர்சிட் வானியலை அணுகக் கூடியதாக்கியவர் வாண்டா டயஸ், எச்.ஐ.வி., எய்ட்ஸ் தடுப்பில் திருப்புமுனை ஏற்படுத்தியவர் குவாரிஷா அப்துல் கரீம், தென் கொரியாவின் முதல் விண்வெளி வீராங்கனை சோயோன் யீ இது போன்று பெண்களின் சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

**பொருளாதர வளம் (EconomicWealth)**

வேலையைப் பகிர்தல், முடிவெடுத்தல் ஆகியவை பெண் பொருளாதாரச் சூழலில் ஆற்றல்பேறு அடைய சாத்தியமாகும் கூறுகளாகும்.

> **"பெண்கள் பொருளாதார ரீதியாக அதிகாரமுடையவர்களாக மாறும்போதுதான் பெண்களின் நிலை இச்சமூகத்தில் உயரும்" (மணிமேகலை, பெண்ணாற்றல் விண்ணாற்றல், ப.58)**

பொருளாதாரச் சுதந்திரத்தை பெண் பெறுகின்றபோது, பெண்கள் தொழில்முனைவு பெறுவதின் மூலம் குடும்ப வருமானம் பெருகுவதோடு வாழ்க்கைத்தரமும் மேம்பாடு அடைகிறது. நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்துவதோடு திறமைகளும் வளர்கிறது. வெளியுலகத் தொடர்பு அதிகரிக்கிறது. பிறரைச் சார்ந்து வாழாது. தற்சார்பு நிலை அடைகின்றனர். மற்றப் பெண்களுக்கு வழிகாட்டியாவதுடன் சமுக அந்தஸ்தையும் பெறுகின்றனர்.

பெண் பொருளாதாரத் தற்சார்பு நிலையை அடைய, அரசாங்கம், வருமானம் ஈட்டும் தொழில்களில் பெண் ஈடுபட வலியுறுத்துவதோடு பலவித திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளன. கிராமப்புற பெண்கள் மேம்பட தேசிய நோக்குத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பெண்கள் அனைத்துப் பாகுபாடுகளையும் களைந்து ஒற்றுமையுணர்வுடன் தங்களை குழுக்களாக இணைத்துக் கொண்டு செயல்பட வாய்ப்பளிக்கின்றது. ஒவ்வொரு பெண்ணும் தனியாக உரிமைக்காகவும் அதிகாரத்திற்காகவும் போராடுவதைவிட குழுக்களாக சேர்ந்து போராடும்போது வெற்றிநிலை விரைவாக கிடைக்கிறது. இக்குழு உணர்வினால் மேலாண்மைப் பண்புகளை மேலும் வளர்த்துக்கொள்ளவும் சமூக விழிப்புணர்வை அதிகரிக்கவும் செய்கின்றன. பிரச்சினைகளை குழுக்களாக எதிர்கொள்ளும்போது தன்னம்பிக்கையும் பெறுகிறார்கள். சமூகநலத் துறையின் மூலமாக குடிசைத் தொழில்களான, மெழுகுவர்த்தி, மூங்கில் பொருட்கள், பட்டுப்பூச்சிச் செடி, மூலிகைச் செடி வளர்த்தல், காளான் வளர்த்தல் மற்றும் தென்னை நாரிலிருந்து பொருட்கள் தயாரித்தல் என பலவகை தொழிலுக்கானப் பயிற்சியும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் பற்றியும் மேலும் விற்பனையைப் பெருக்குவதற்குமானப் பயிற்சியையும் அளிக்கின்றது. விவசாயம், தோட்டக்கலை, உணவு தயாரித்து வழங்குதல் மூலம் பெண்கள் சுயதொழிலில் ஈடுபட்டு முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

**தொழில்முனைதல் (Entrepreneurship Skill)**

தொழில் முனைவுத் திறன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதோடு வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்துகிறது. பிறருக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கவும் வழி ஏற்படுகிறது.

> **"வளங்கள், வாய்ப்புக்களைக் கண்டறிந்து, தன்னிடம் உள்ள திறமையை வெளிக்கொணர்ந்து, இலாப, நட்டங்களை எதிர்நோக்கி செயல்படுத்தலே தொழில் முனைதல் ஆகும்." (மகளிர் மேம்பாடு, ப.90)**

ஆளுமை கொண்ட ஒவ்வொரு பெண்ணும் பொருளாதாரத் தற்சார்பில் மேம்பட்டுச் சிறக்க, தொழில் முனைவு என்பது அவசியமான ஒன்றாகும்.

**உடல் நலம் பேணுதல் (Health Status of Women)**

பெண் உடல்ரீதியாக பல்வேறு பிரச்சினைகளைச் சந்திப்பதோடு இரத்தசோகை, மகப்பேறு பிரச்சினைகள், புற்றுநோய், நோய்க்கிருமி தொற்றுகள் போன்ற பாதிப்புக்களுக்கும் உள்ளாகிறாள். வளரிளம் பருவத்திலிருந்தே பெண்ணிற்குத் தேவையான ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைக்காமை, வறுமை, அறியாமை, இளவயது திருமணம், அடிக்கடி பிள்ளை பெறுதலால் ஆரோக்கியமற்றவர்களாகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையில் கூட, ஆண் கடின வேலை செய்பவன், அறுவை சிகிச்சையால் உடல் வலிமை குறைந்து விடும் என்ற ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தது. இத்தகைய கருத்தாக்கம் ஆணுக்கு மிகவும் வாய்ப்பாகிப் போனது. ஆண்மைவாதம் உயர உயர பெண்கள் குடும்பக்கட்டுப்பாடு சதவீதத்தை அதிகப்படுத்தினார்கள். இதிலும் பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். உடல்வளம் குறைவதால் சிந்திக்கும் உணர்வில் தளர்வுநிலை ஏற்படும். செயல்பாடுகளில் சோம்பல் ஏற்படும். இந்நிலையை தவிர்க்கவே ஆண் தனது பகிர்வைப் பெண்களுக்கு ஈடாக்க முன் வந்துள்ளனர். நவீன முன்னேற்றங்களால் ஆண்களுக்கான குடும்பக்கட்டுப்பாடு சிகிச்சையில் பழைய முறைகள் பின்பற்றப்படுவதில்லை. சிலமணி நேரங்களிலே எத்தகைய வேலைக்கும் தயாராகிவிடலாம்.

> **'Non-Scalpel Vasectomy" என்னும் ஆண்களுக்கான அறுவை சிகிச்சை முறையை மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் தற்போது விளம்பரப்படுத்தி வருகிறது.'**

இது போன்ற பெண்ணுக்கு மட்டும் என்று விதிக்கப்பட்ட நிலையில் மாற்றம் தொடர்ந்து வருகின்றது. இதிலிருந்து மனிதகுலம் சமத்துவ நிலையில் முழுமையை எட்டும் என்பதில் ஐயமில்லை.

**நிறைவாக**

பெண்ணை உயிரியாகவும் சமத்துவப் பார்வையோடு பார்க்கின்ற போதுதான் பெண்ணின் ஆளுமை வெளிப்படுகின்றது. பெண் ஆற்றல் கொண்டவளாக முழுமையான தற்சார்புக் கொண்டவளாக வாழ குடும்பம் மற்றும் சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. பெண்கள் இல்லா துறைகள் இல்லை என்ற முழுமை அடைவதில் விரைவை ஏற்படுத்த வேண்டும்.